# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## மாகாணமட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை – 2015
## தமிழ்மொழியும் இலக்கியமும்
## விடைத்தாள்

**தரம் - 11**

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 2) 4 | 3) 2 | 4) 2 |
| 5) 4 | 6) 1 | 7) 2 | 8) 1 |
| 9) 4 | 10) 3 | 11) 1 | 12) 2 |
| 13) 4 | 14) 4 | 15) 3 | 16) 1 |
| 17) 1 | 18) 2 | 19) 4 | 20) 2 |
| 21) 3 | 22) 4 | 23) 1 | 24) 2 |
| 25) 1 | 26) 3 | 27) 3 | 28) 4 |
| 29) 1 | 30) 4 | 31) 4 | 32) 2 |
| 33) 1 | 34) 3 | 35) 3 | 36) 4 |
| 37) 1 | 38) 3 | 39) 2 | 40) 2 |

(40 புள்ளிகள்)

### பகுதி II

01) i) நீட்டு + ஓலை + வாசியாது + நின்றான் + குறிப்பு + அறியமாட்டாதவன்

ii) பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

iii) பெயரெச்சம் - எழுதிய
வினையெச்சம் - கிழித்து

iv) ஒன்றுமில்லையம்மா உங்களைத் தான் பார்க்க வந்தேன்.

v) எழுவாய் - ஆண்டி
பயனிலை - ஊதிக்கெடுத்தான்

vi) பிரதேசக்கிளை மொழி
சமுகக்கிளை மொழி

vii) காடுகள் கொடிய யுத்தங்களால் அழிக்கப்படுகின்றன.

viii) வணக்கத்துக்குரிய.

ix) உதாரணம் தருதல்
வர்ணனைகள், அணிகள் எழுதுதல்.

x) 1) கடவுள் வாழ்த்து
2) சபை வணக்கம்
3) கதை ஆரம்பம்
4) கதை வளர்ச்சி
5) முடிவு
6) சபையோருக்கு நன்றிகூறி மங்களம் பாடுதல். (20 புள்ளிகள்)

02) புள்ளித்திட்டம்

| | |
|---|---|
| பொருளமைவும் அளவும் | 12 புள்ளிகள் |
| கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் | 06 புள்ளிகள் |
| எழுத்து நுட்பங்கள் | 05 புள்ளிகள் |
| தலையங்கம் | 02 புள்ளிகள் |
| மொத்தம் | 25 புள்ளிகள் |

(25 புள்ளிகள்)

03) 1. சிலப்பதிகாரம், கியூரி அம்மையார் வரலாறு, கஸ்தூரியார் அம்மையார் வரலாறு என்பவற்றைப் படித்தல்.
2. அன்பான இல்வாழ்க்கை வளர வாழ்க்கை முறையின் அவசியம்
3. நட்புக்காக பெரியோர்கள் சொன்னவை யாவும் கணவன் மனைவி வாழ்க்கைக்கும் பொருந்தும்
4. நல்லாருடன் கொண்ட நட்பின் தன்மை
5. தீயவருடன் கொண்ட நட்பின் தன்மை
6. நல்ல பண்பு கொண்டவராயின் முதுமையிலும் அன்பு, பண்பின் வளர்ச்சி.
7. நற்பண்பைக் காத்தல் வேண்டும். (10 புள்ளிகள்)

04) i) மாலைக்காட்சி
ii) கானெல்லாம் மலர்ந்தமுல்லை, ககன மீதெழுந்ததென்ன.
iii) நிலாவின் புகழ்
iv) கிழக்குத்திசை
v) வண்ண, உண்ண கானெல்லாம், வானெல்லாம். (10 புள்ளிகள்)

05) கடிதம்

| | | |
|---|---|---|
| அமைப்பு | - | 04 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | - | 08 புள்ளிகள் |
| மொழிநடை | - | 03 புள்ளிகள் |
| மொத்தம் | - | 15 புள்ளிகள் |

துண்டுப்பிரசுரம்

| | | |
|---|---|---|
| அமைப்பு | - | 04 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | - | 08 புள்ளிகள் |
| மொழிநடை | - | 03 புள்ளிகள் |
| மொத்தம் | - | 15 புள்ளிகள் |

(15 புள்ளிகள்)

**பகுதி** III

1) அ. செல்வம்
ஆ. ஒருவனுக்கு அழிவற்ற செல்வம் கல்வியே ஆகும். மற்றைய செல்வங்கள் செல்வங்கள் ஆகா.

2) அ. விளம்பிநாகனார்
ஆ. ஒவ்வொரு பாடலும் நான்கு நீதிக்கருத்துக்களைக் கொண்டுள்ளதால்

3) கம்பரால்
குலோத்துங்க சோழனுக்கு

4) பலவகைப் பொருள் பற்றி வெவ்வேறு செய்யுள்களால் 100 பாட்டுக்களில் அமைந்த சிற்றிலக்கிய வகை

5) கடலில் இரைச்சல் அடங்காமை, கோழியின் வாய்க்குள் மண் அடைத்து விட்டதோ தினகரனும் தேரும் பாதாளத்துள் விழுந்து விட்டதோ, ஊழி இரவாக வடிவெடுத்து விட்டதோ.

6) நல்ல பிள்ளைக்கு ஒரு சொல் நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, பிறர்க்கு பள்ளம் தனக்கிடு பள்ளம்.

7) தற்குறிப்பேற்ற அணி

8) நந்தி (சிவஞானசுந்தரம்) தர்மலிங்கம், தங்கம்மா, விமலன்

9) i) சுயம்வர காண்டம்
ii) வீமராசன்

10) சென்றொழிந்தகாலம் திரும்பிவரமாட்டாது. (20 புள்ளிகள்)

அ) பொருள் - தன்னைச் சூழ்ந்த ஊழ்விதியின் காரணமாக, தான் காதல் கொண்ட நளமகாராசனைத் தன் உள்ளத்திலே நினைத்துக் கொண்டு ஒளி பொருந்திய மாலையை அணிந்த வீமராசனுடைய உண்மையான குலத்திலே பிறந்த சிறப்புப் பொருந்திய கன்னிப் பெண்ணாக நான் இருந்தால் அன்னப்பறவை அன்று எனக்குக் கூறிய நளமகாராசனுக்கு இம் மணமாலையை நான் சூட்ட எனக்கு அருள்வாயாக என்று பிரார்த்தித்தாள்.

சிறப்பு - இவ்வடிகளில் தமயந்தியின் மனநிலை எடுத்துக்காட்டப்படுகின்றது. நளமகாராசனை உள்ளத்திலே நினைத்துக் கொண்டு தெய்வத்தைப் பிரார்த்திக்கும் நிலை கூறப்பட்டுள்ளது.

ஆ) பொருள் - மங்கையர்களின் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்தோடச் செய்கின்ற காலம். மன்மதன் தனது கரும்பு வில்லில் மலரம்புகளைத் தொடுக்க மயில்கள் தோகை விரித்தாடும் காலம். மங்கையர்களின் கொங்கைகளும் கொன்றை மரங்களும் முறையே பொன் போன்ற தேமலையும் பொன்போன்ற பூக்களையும் சொரியும் காலம். தாமரைகளும், ஒளி பொருந்திய முல்லைகளும் பூப்பூக்கும் காலம் மேகத்தைப் போன்ற கொடை கொடுக்கின்ற சிவந்த கரங்களினால் சிறந்த பொன்னை இரவலர்களுக்குக் கொடுக்கின்ற தியாகி நந்திவர்மனின் காதல் மங்கையர்களுக்குக் கிட்டாத காலம் கணவன் வாழும் இடத்தே உயிரும் இவ்விடத்தே என் உடலும் ஆகித் தனித்தனியே இருக்கச் செய்த மழைக்காலம். கணவரை அங்கே தன்னந்தனியாகவும் இங்கே என்னைத் தன்னந்தனியாகவும் ஆக்கிய கொடுங்காலம்.

சிறப்பு - இத்தடித்த எழுத்துப் பகுதியில் நந்திவர்மனின் கொடைச் சிறப்பும், தன்னலம் கருதாத சிறப்பும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனில் மேகம் மழை பொழிவதைப் போல இவனும் தனது அழகிய சிவந்த கைகளினால் இரப்பவர்களுக்கு பொன்னை வாரிவழங்குகின்ற தன்னலங்கருதாத தியாகி என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

இ) பொருள் - “இச் சருகுகளை என் மீது எறிந்தீர்கள் அல்லவா? உங்களின் வல்லமையை அழிக்கின்றேன் என்று சொல்லி தனது பற்களைக் கடித்து புருவத்தை நெருக்கி சினத்தோடு அவைகளை உற்றுப்பார்க்க அவரது தவவலிமையால் அவர் தலையில் நின்றும் எழுந்த தீக் கொழுந்து அப்பறவைகளைச் சாம்பராக்கிற்று.

சிறப்பு - இவ்வடிகள் துறவியின் சினத்தையும், அவரது தவ வலிமையையும் எடுத்துரைக்கின்றது. ஐம்பொறிகளையும் அடக்கிய துறவியாயினும் பொறுமை இழந்தவராய், ஆணவச் செருக்கு உடையவராய், சினங்கொண்டவராய் இருப்பதை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

ஈ) பொருள் - அறிவுள்ள செல்வரை உலகத்தார் வாழ்த்துவர். அறிவில்லாத செல்வரை உலகத்தார் பழிப்பர். அறிவுள்ளவனிடம் உள்ள செல்வம் கண்டு உலகம் மகிழும். அறிவில்லாத செல்வனது அழிவைக் கண்டு உலகம் மகிழும். அறிவுள்ள செல்வன் தன்னிடம் உள்ள பொருளைப் பொருத்தமான முறையில் பயன்படுத்தி இப்பிறப்பில் புகழும் மறுபிறப்பில் பேரின்பத்தையும் அடைவான். அறிவில்லாத செல்வந்தன் பயனுள்ள முறையில் வாழும் பண்பை அறியாத அறிவில்லாதவனாய் இப்பிறப்பில் பழியும் மறுபிறப்பில் துன்பமும் அடைவான்.

சிறப்பு - இத்தடித்த எழுத்துப் பகுதியில் அறிவுடைய செல்வரிடம் உள்ள பொருளும் அதன் சிறப்பும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அவன் பொருளைத் தக்கவாறு பயன்படுத்துவதால் இப்பிறப்பில் புகழும் அதன் பயனால் மறுமையில் பேரின்பமும் அடைவான் என்பதன் மூலம் இருமையும் அவன் சிறப்படைவான் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. (20 புள்ளிகள்)

03) அ) எந்தவொரு விடயமும் அது சொல்லப்படுகின்ற விதத்தால் குழந்தையின் மனதில் ஆழப்பதிந்து விடும்.

ஆ) சிறுகதையின் கருவுக்கு ஏற்றாற் பேலவே பாத்திரம் படைக்கப்படல்
ரோஹிணி 6 வயது நிரம்பியவளாகக் காட்டப்பட்டுள்ளது.
வயதில் குறைந்தவளாகக் காட்டினால் அவளின் சிந்தனை ஆற்றல் பெற்றுக்கொள்ளள முடியாது.
வயதில் கூடியவளாகக் காட்டினால் குழந்தையின் மனநிலை இல்லாமல் போய்விடும்.
எனவே 6 வயது நிரம்பியவளாகக் காட்டப்பட்டுள்ளது.
மிகத் துடிப்புள்ளவள் ஆற்றல் உள்ளவள்
ஆர்வமுடையவள்
தந்தை சோமசுந்தரம் பாத்திரம் மிகவும் நேர்த்தியாகக் காட்டப்பட்டுள்ளது.
தந்தை குழந்தையின் மனநிலையை நன்குணர்ந்தவராகவும் காட்டப்பட்டுள்ளது.

இ) குழந்தைகளை சமய நம்பிக்கையுடையவர்களாக வளர்க்க வேண்டும்.
பொய் பேசுதல் கூடாது
கடவுளுக்கு அது ஏற்காது
உண்மை பேசுதல் வேண்டும்

பெற்றோரின் வளர்ப்பால் குழந்தை நல்லவராவதும் தீயவராவதும்
சமய நம்பிக்கை உடையவராக குழந்தையை வளர்க்க வேண்டும்.

அல்லது

வள்ளியும் முருகனும் கலந்து மகிழ்ந்திருக்கும் காட்சி
அல்லிக் குளத்தருகே....

காதலன் பிரிவினால் வருந்துவம் காதலி பிரிவினால் காதலன் வருந்துவதும்
இருவரும் இன்னல்கள் தீர்த்து கூடும் காட்சி காதற் பிரிவினால் வருந்துகின்ற காதலன் தவிப்பு
மேனி கொதிக்குதடி......

காதலன் பிரிவு காதலி மனநிலை
பெண்ணென்று பூமி தன்னிற்...... (15 புள்ளிகள்)

04) கொடை

அ) மழைபோல வாரிவழங்கும் கரம்.....
உவமையணி........
செங்கை முகில் அனைய செம்பொன் பெய் ஏகதியாகி....
கொடை சிறப்பிக்கப்படுகிறது.
உவமையணி (விளக்க வேண்டும்)

ஆ) வீரம் கோட்டை இடித்து.....
யானையின் வீரச் செயல் மூலம்
இராமபிரானுக்கு ஒப்பிடல்
அம்பொன்று வில் ஒடிதல்....

இ) ஓடுகின்ற மேகங்காள்......

அல்லது

04) அ) மங்கையர்க்கரசி சிற்றப்பனது வேண்டுகோளை மீறி கருணாகரனை மணமுடிப்பதற்கு காளி கோவிலில் காத்திருத்தல்
காத்திருக்கும்போது கூறிய கூற்று.
மார்த்தாண்டனைக் கொலை செய்தல்
தன் உயிரை மாய்த்தல்

ஆ) சூசிகை
உரையாடல்
அணிகள்
உணர்வுகள்
பேச்சுவழக்கு
வரலாற்றுச் சம்பவம் (15 புள்ளிகள்)

05) எளிமையான பெண்
ஞானம் மிக்கவள்
கணவனை உபசரிப்பவள்

கடமை உணர்வு
பிறரை ஆற்றுப்படுத்துபவள்
படிப்பினை.
ஞானம் எல்லாவற்றிலும் மேலானது.
செய்யும் தொழிலே தெய்வம்.
பெற்றோரைப் பேணல்
நான் என்ற அகந்தை நீங்கவேண்டும்.

06) திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு
விளக்க வேண்டும்.

07) * ஊருணி நீர்நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு.

* பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம்
நயனுடையான் கட்படின்

* மருந்தாகித் தப்பா மரத்தாற்றல் செல்வம்

* நச்சப்படாதவன் செல்வம் நடுவூரில்
நச்சு மரம் பழுத்தற்கு

* நல்லார் கண்பட்ட வறுமையின்னாதே
கல்லார் கண்பட்ட திரு.

The National e-learning Portal for The General Education